## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்–கல்வி–அரசுப் பள்ளிகள்/ஆதி திராவிடர் நலப் பள்ளிகள்/அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள்/மாநகராட்சி/நகராட்சிப் பள்ளிகளில் பயின்று பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் ஆதிதிராவிடர்/பழங்குடியின மாணாக்கர்களைத் தேர்வு செய்து ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மிகச் சிறந்த தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் சேர்த்து 11 மற்றும் 12–ஆம் வகுப்பு பயிலச் செய்யும் திட்டம் 2017–2018–ஆம் கல்வி ஆண்டில் திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்துவதன் பொருட்டு நிதி ஒப்பளித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 7) துறை**

அரசாணை (ப) எண். 255

நாள்: 11.10.2017
திருவள்ளுவர் ஆண்டு 2048
ஹேவிளம்பி – புரட்டாசி திங்கள்
25–ஆம் நாள்.
படிக்கப்பட்டது.

1. அரசாணை (ப) எண்.92, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துறை, நாள்.30.05.2007
2. அரசாணை (ப) எண்.69, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (ஆதிந1) துறை, நாள்.25.03.2017
3. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடிதம் ந.க.எண். க1/10398/2016, நாள் 27.07.2017.

********

**ஆணை :–**

அரசுப் பள்ளிகள் / ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் / அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் / மாநகராட்சி / நகராட்சிப் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்கள் 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றும், பொருளாதாரச் சூழ்நிலையின் காரணமாக தரமான மேல்நிலைக் கல்வி பெற இயலாமல் போகிறது. எனவே, இந்த இனங்களைச் சார்ந்த மாணாக்கர்களை தொழிற்படிப்பிற்கான நுழைவுத் தேர்விற்கு தயார் செய்யும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும், அரசுப் பள்ளிகள் / ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் / அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் / மாநகராட்சி / நகராட்சிப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று, குடும்ப ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு இலட்சம் மற்றும் அதற்குக் குறைவாக உள்ள,

ஆதிதிராவிடர் / பழங்குடியின மாணாக்கர்களை (குறைந்தபட்சம் மூன்று மாணவியர்கள் உட்பட) மாவட்டத்திற்கு 10 மாணாக்கர்கள் வீதம் தேர்வு செய்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மிகச் சிறந்த தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் அந்தந்த மாணாக்கர்களின் விருப்பப்படி சேர்த்து மேல்நிலைக் கல்வி பயிலச் செய்யும் திட்டம் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி 2007–2008 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், அரசால் நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களுக்கானத் தொகை ஒரு மாணாக்கருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.28,000/– வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ.56,000/– என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2016–2017–ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஒரு மாணவர் / மாணவிக்கு ஒரு ஆண்டிற்கு ரூ.28,000/– என்ற அடிப்படையில் 293 மாணாக்கர்களுக்கு 2 ஆண்டுகளுக்கான கல்வி மற்றும் இதர கட்டணம் செலவினமாக கணக்கிடப்பட்ட மொத்தம் தொகையான ரூ.1,64,08,000/– இல் முதலாமாண்டு கட்டண தொகையாக ரூ.67,35,800/– ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் 2016–2017–ஆம் கல்வியாண்டில் மேற்படி திட்டத்தின்கீழ் தனியார் பள்ளிகளில் 11–ஆம் வகுப்பில் சேர்க்கப்பட்ட 293 மாணவ / மாணவியர்களுக்கான கட்டணங்களுக்காக ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையில் ரூ.66,24,970/–மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்–பட்டதாகவும், 2017–2018–ஆம் கல்வியாண்டில் இம்மாணாக்கர்கள் 12–ஆம் வகுப்பில் படிப்பினை தொடர கட்டணம் மாவட்டங்களுக்கு வழங்க ரூ.66,24,970/– ஒப்பளிப்பு செய்து உரிய ஆணையினை வழங்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

4. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டது. ஆதி திராவிடர் நல இயக்குநரின் கோரிக்கையை ஏற்று, இத்திட்டத்தின் கீழ் 2016–2017–ஆம் கல்வி ஆண்டில் 11–ஆம் வகுப்பில் சேர்க்கப்பட்ட 293 மாணாக்கர்களும் 2017–2018–ஆம் கல்வியாண்டில் 12–ஆம் வகுப்பில் படிப்பினை தொடர அம்மாணாக்கர்கள் பயிலும் கல்வி நிறுவனங்களின் கேட்பின் அடிப்படையில் கல்வி மற்றும் இதர கட்டணமாக ரூ.66,24,970/– (ரூபாய் அறுபத்தாறு இலட்சத்து இருபத்தி நான்காயிரத்து தொள்ளாயிரத்து எழுபது மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்–01–ஆதிதிராவிடர் நலன்–277–கல்வி–

மாநிலச் செலவினங்கள்–KS–திறன்மிக்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள் சிறந்த பள்ளிகளில் படிப்பதற்கான நிதி உதவி–09–உதவித் தொகை 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (த.தொ.கு 2225 01 277 KS 0932)"

6. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்த அறிக்கையினை அரசுக்கு அனுப்புமாறும், ஒப்பளிக்கப்பட்ட தொகையில் மாணவர்/மாணவியர் இடைநிற்றலினாலோ அல்லது வேறு நிகழ்வுகளினாலோ செலவிடப்படாமல் மீதம் இருப்பின் அந்தத் தொகை அரசின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும் என்றும் ஆதி திராவிடர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை அலுவல் சார்பற்ற எண்.49789/ஆதி(ம)பந/2017, நாள்.03.10.2017–இல் நிதித்துறையின் ஒப்புதலை பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர் (முகூபொ)

**பெறுநர்**
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 8.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்.
மாநில முதன்மை கணக்காய்வுத்தலைவர், சென்னை– 18 /35/6.
மாநில முதன்மை கணக்காய்வுத்தலைவர், (கணக்கு மற்றும் பண வரவுகள்), சென்னை– 18.
**நகல்**
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அரசு முதன்மைச் செயலரின்
முதுநிலைத் தனிச் செயலர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந 5) துறை, சென்னை–9.
நிதித் (ஆதி (ம) பந) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உபரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

11/10/17

பிரிவு அலுவலர்.